O.S. No: 136/2019

பெயர் :கலியபெருமாள்

**வா.சா. 3**

05-02-2025

**குறுக்கு விசாரணை**

வாதிக்கும் பிரதிவாதிக்கும் என்ன சண்டை நடந்தது என்று தெரியாது. சாந்தி வழக்கில் என்ன கட்சி எழுதி போட்டுள்ளார் என்று தெரியாது . ராஜு என்ன கட்சி செய்கிறார் என்று தெரியாது என்றால் சரியல்ல . வாதி பிரதிவாதி எல்லாம் ஒரே தெருதான். வேலியை வெட்டவே இல்லை என்று நான் குறிப்பிட்டுள்ள தேதி எனக்கு தெரியாது . பிரமாண வாக்குமூலத்தில் தேதி தெரியாது என்று நான் சொன்னதால் அதிலுள்ள வாசகங்கள் தெரியாது என்றால் சரி . ராஜு எனக்கு வேண்டபட்டவர் என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரில்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

O.S. No: 136/2019

பெயர் :காசிராமன்

**வா.சா.2**

05-02-2025

**குறுக்கு விசாரணை**

வாதி என்ன வழக்கு போட்டிருக்கிறார் என்று தெரியுமா என்றால் வாதி இடம் சம்மந்தமாக வழக்கு போட்டிருக்கும் விசயம் தெரியும் நான் வழக்கை படித்து பார்த்திருக்கிறேன். பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார் என்று தெரியாது. நான் சொன்ன கிரைய ஒப்பந்தம் பழனி என்ற கணக்கு பிள்ளையிடம் வைத்து எழுதப்பட்டது. தயார் செய்த கணக்குபிள்ளை சோழபுரம். கிரைய ஒப்பந்தம் 4 பத்திரத்தில் எழுதப்பட்டது. அது 50 ரூபாயா, 100 ரூபாயா என்று தெரியாது. ஆனால் பத்திரத்தில் எழுதப்பட்டது. அது ஒரு புளு கலர் பேனாவில் தான் எழுதப்பட்டது . நான் சாட்சி கையெழுத்து போட்டது கருப்பு கலர் பேனாவால் போட்டேன் . கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதியில் சாந்தியின் மூல பத்திரம் கொடுக்கவில்லை . எந்த சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் திருப்பனந்தாள் சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் பதிவு செய்யப்பட்டது . நான் படிக்கவில்லை. எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன் . வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக எனக்கு தெரியாது . நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல . வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.